# 3 மெட்ரோ ரயில் நிலையங்களில் கூடுதல் சுரங்கப் பாதை

■ சென்னை

சென்னையில் அண்ணா நகர் டவர், அண்ணா நகர் கிழக்கு, பச்சையப்பன் கல்லூரி ஆகிய 3 மெட்ரோ ரயில் நிலையங்களிலும் லிஃப்ட் மற்றும் எஸ்கலேட்டர் வசதியுடன், அமைக்கப்பட்டுள்ள சுரங்கப் பாதைகள் மக்கள் பயன்பாட்டுக்கு திறந்துவிடப்பட்டுள்ளன.

சென்னை விமான நிலையத்தில் இருந்து சென்ட்ரல் மற்றும் தேனாம்பேட்டை டிஎம்எஸ், பரங்கிமலையில் இருந்து சென்ட்ரல் ஆகிய 3 வழித்தடங்களில் மெட்ரோ ரயில்கள் இயக்கப்படுகின்றன. இதில் திருமங்கலம் வரையிலான சுரங்கப் பாதையில் மெட்ரோ ரயில் நிலையங்கள் கட்டப்பட்டுள்ளன.

## லிஃப்ட், எஸ்கலேட்டர் வசதி

இந்த சுரங்க ரயில் நிலையங்களில் பயணிகள் வந்துசெல்ல ஏதுவாக, ஒவ்வொரு நிலையத்திலும், 4 சுரங்கப் பாதைகள் அமைக்கப்பட்டு வந்தன. இதில் ஏற்கெனவே 2 சுரங்கப் பாதைகள் திறக்கப்பட்டு மக்களின் பயன்பாட்டில் இருந்து வருகின்றன.

இந்த நிலையில், அண்ணா நகர் டவர், அண்ணா நகர் கிழக்கு, பச்சையப்பன் கல்லூரி ஆகிய 3 மெட்ரோ ரயில் நிலையங்களிலும் லிஃப்ட் மற்றும் எஸ்கலேட்டர் வசதியுடன், சுரங்கப் பாதை அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளதால், அவை தற்போது மக்கள் பயன்பாட்டுக்கு திறந்துவிடப்பட்டுள்ளது.